**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

தேதி 25.09.2025

சிசி.203/2024

**அ.சா.1 மீண்டும் ஆஜர். சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் நான் புகார் மனு அளித்தபிறகு என்னை விசாரித்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். எதிரிக்கு எதிரான புகார் மனு யாரால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்றால் என்னால் எழுதிக்கொடுக்கப்பட்டது. புகார் மனு என்னால் கைப்பட எழுதப்பட்டதா என்றால் புகார் மனு என்னுடைய உதவியாளரால் நான் சொன்னதன்பேரில் எழுதப்பட்டது. புகார்மனு எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால் புகார்மனு எனது அலுவலகத்தில் வைத்து எழுதப்பட்டது. புகார் மனு எழுதப்படும்போது அ.சா.2 என்னுடன் இருந்தாரா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு முதலில் யார் சென்றார் என்றால் அ.சா.2 அவரது குழுவுடனும், நான், சண்முகையா மற்றும் யாஸ்மெரின் செல்வஜோதி ஆகியோர்கள் ஒன்றாக சம்பவ இடத்திற்கு சென்றோம். அ.சா.2 உடன் குழுவாக வந்த நபர்கள் யார் என்றால் அமலாக்கப்பிரிவில் அ.சா.2 உடன் வேலை பார்க்கும் நான்கைந்து நபர்கள் உடன் வந்தனர். மேற்படி நபர்களுக்கு வழக்கு சம்பவம் பற்றி தெரியுமா என்றால் தெரியும். அ.சா.2 அவரது குழுவுடன் சம்பவ இடத்திற்கு சோதனைக்கு வந்தார் என்று எனது புகார் மனுவிலும் போலீசார் விசாரணையிலும் கூறினேனா என்றால் கூறினேன். சம்பவ இடத்திற்கு நாங்கள் சோதனைக்கு செல்வதற்கு முன்பு எதிரி நிறுவனத்தில் மின்திருட்டு ஏற்பட்டதாக தெரிவித்து புகார் மனு ஏதும் வந்ததா என்றால் இல்லை. சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்ட பொருட்கள் என்னவென்றால் மின்மீட்டர் சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது. நான் புகார் மனு அளித்தபோது மேற்படி மின்மீட்டரை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். நாங்கள் சம்பவ இடத்திற்கு சோதனை செய்ய சென்றபோது எதிரியின் நிறுவனம் செயல்பட்டு கொண்டிருந்ததா என்றால் எதிரியின் நிறுவனம் பூட்டப்பட்டிருந்தது. பூட்டப்படட நிறுவனத்திற்குள் ஆட்கள் யாரேனும் வேலை செய்து கொண்டிருந்தார்கள் என்றாலும், இயந்திரங்கள் எதுவும் இயங்கிக் கொண்டிருந்தது என்றாலும் தண்ணீர் சுத்திகரிப்பு செய்யும் சாதனம் மட்டும் இயங்கிக் கொண்டிருந்தது. வழக்கின் எதிரி எந்த தேதியிலிருந்து எந்த தேதி வரை மின்திருட்டு செய்தார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. எதிரி நிறுவனம் எவ்வளவு யூனிட் மின்திருட்டு செய்தது என்று

எவ்வாறு estimate செய்தோம் என்றால் 37340 யூனிட் எதிரியின் நிறுவனத்தால் மின்திருட்டு செய்யப்பட்டது. எதிரி நிறுவனம் மேற்படி யூனிட்டுகளை மின்திருட்டு செய்தது என்று estimate செய்வதற்கு அதற்கான பார்முலாவை உபயோகப்படுத்தி கணக்கீடு செய்தோம். பொதுவாக மின்கணக்கீட்டாளர் 2 மாதங்களுக்கு ஒரு முறை மின்மீட்டர் கணக்கீடை எடுப்பர் என்றால் சரிதான். எதிரியின் நிறுவன மின்மீட்டரின் கணக்கீடு தொடர்பாக கணக்கீட்டாளர் எனக்கு விபரம் தெரிவிப்பார் என்றால் கரிவலம்வந்தநல்லூர் உதவிபொறியாளரிடம் தெரிவிப்பார். சம்பவம் நடந்ததற்கு முன்பாக ஒரு வருட காலத்திற்குள் மேற்படி மின்கணக்கீட்டாளர் எதிரி நிறுவனத்தால் மின்திருட்டு செய்யப்படுகிறது என்று புகார் மனு அளித்தாரா என்றால் இல்லை. சம்பவ இடத்தை சோதனை செய்தபோது எதிரி நிறுவனத்திற்குள் நாங்கள் சென்றோமா என்றால் சென்றோம். வழக்கு ஆவணங்கள் எனது அலுவலகத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பு எதிரி நிறுவனத்தால் மின்திருட்டு செய்யப்படுவதாக பொதுமக்களிடமிருந்து எங்கள் துறைக்கு புகார் வந்ததா என்றால் இல்லை. ஆனால் எதிரி தண்ணீர் சுத்திகரிப்பு செய்யும் சாதனத்தை எங்கள் அனுமதியின்றி பயன்படுத்தி கூடுதல் மின்உபயோகம் செய்து கொண்டிருந்தார். மேற்கூறியவாறு எதிரி தண்ணீர் சுத்திகரிப்பு செய்யும் சாதனத்தை எங்கள் அனுமதியின்றி பயன்படுத்தி கூடுதல் மின்உபயோகம் செய்து கொண்டிருந்தார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. எங்கள் துறைக்கு நேரடியாக வரும் புகார் மற்றும் பதிவுத்தபால் மூலம் வரும் புகார் ஆகியவற்றின் பதிவுகளை ஒரு பதிவேட்டில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். 01.11.2011 ம் தேதி எதிரி தனது நிறுவனத்தின் மின்மீட்டரில் குறைபாடு உள்ளது என்று தெரிவித்து கரிவலம்வந்தநல்லூர் உபமின்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடன் சோதனைக்கு வந்த கரிவலம்வந்தநல்லூர் உதவிப்பொறியாளர் 01.11.2011 ம் தேதி எதிரியால் மேற்படி புகார் அளிக்கப்பட்டது என்று என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. நாங்கள் சோதனை செய்வதற்கு செல்லும் காலத்திற்கு முன்பு வரை எதிரி தனது நிறுவனத்தின் மின்கட்டணங்களை செலுத்தியுள்ளார் என்றால் சரிதான். எதிரி செலுத்திய மின்கட்டணத்தின் அடிப்படையில்தான் 37340 யூனிட்டிலிருந்து 3000 யூனிட்

கழிக்கப்பட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளில் எதிரியின் மகனுக்கு சென்னையில் விபத்து ஏற்பட்டு கால்எலும்பு முறிந்த நிலையில் மருத்துவமனையில் இருந்ததால் அவரை பார்ப்பதற்கு எதிரி செல்ல வேண்டும் என்ற மனநிலையில இருந்ததை பயன்படுத்தி எதிரியிடமிருந்து வெற்றுக்காகிதம் மறறும் வெற்றுக் காசோலையில் கையெழுத்து பெற்றோம் என்றால் சரியல்ல. இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு எத்தனை வருடங்களுக்கு சங்கரன்கோவிலில் பணியிலிருந்தேன் என்றால் சுமார் 4 வருடங்களுக்கு பணியில் இருந்தேன். என்னுடைய பரிந்துரையின்பேரில்தான் கரிவலம்வந்தநல்லூரில் உள்ள உபமின்நிலையத்திலிருந்து மின்இணைப்பு வழங்கப்படும் என்றால் உபமின்நிலையங்களில் 40 கிலோவாட்டுக்கு மேற்பட்ட மின்இணைப்பு வழங்கப்படுவதற்கு எனது பரிந்துரை அவசியமானது. அதற்கு கீழ் மின்இணைப்புகளுக்கு உபமின்நிலையத்தின் உதவிப்பொறியாளரின் பரிந்துரை போதுமானது. எதிரி நிறுவனத்தில் எததனை கிலோவாட் மின்சக்தி பயன்படுத்தும் இயந்திரங்கள் உள்ளன என்றால் 16 கிலோவாட் மின்சக்தி பயன்படுத்தும் இயந்திரங்கள் உள்ளன. மேற்கூறியவாறு எதிரி நிறுவனத்தில் 16 கிலோவாட் மின்சக்தி பயன்படுத்தும் இயந்திரங்கள் உள்ளன என்பதை காண்பிக்கும் ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் எதிரி நிறுவனத்தின் மின்பழுவை காண்பிக்கும் ஆவணத்தில் அது குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை போலீசாரிடம் கொடுத்துள்ளோம். எதிரி நிறுவனத்தின் உடைக்கப்பட்டதாக சொல்லப்படும் மின்மீட்டரின் உபரிபாகங்களை நாங்கள் போலீசரிடம் ஒப்படைத்தோமா என்றால் எதிரி நிறுவனத்தின் மின்மீட்டர், அதன் டாப்கவர் மற்றும் உடைக்கப்பட்ட சீல் ஆகியவற்றை போலீசாரிடம் ஒப்படைத்தோம். சம்பவ தினத்தன்றே காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளித்தேனா என்றால் எதிரி பணம் செலுத்துவதற்கு தயாராக இருந்ததால் சம்பவ தினத்தன்று காவல்நிலையத்திற்கு செல்லவில்லை. எதிரியிடம் இருந்து பெறப்பட்டதாக சொல்லப்படும் காசோலையை காவல்நிலையத்தில் ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். மோசடி காசோக்கு எதிராக வழக்கு பதிவு செய்யலாம் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் சம்பவத்தின்போது எனக்கு தெரியாது. காசோலை மோசடி வழக்கு தொடர்பாக தனிச்சட்டம் உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியும், (சாட்சி பின்பு சம்பவத்தின்போது அந்த சட்டம் பற்றி தெரியாது

என்று கூறினார். ) 16.11.2011 ம் தேதி எதிரி சங்கரன்கோவில் செயற்பொறியாளர் மின்விநோயகம், AEE (Distribution )சங்கரன்கோவில், உதவி செயற்பொறியாளர் அமலாக்கம் மற்றும் விழிப்புணர்வு பிரிவு திநெல்வேலி, மேற்பார்வை பொறியாளர் திருநெல்வேலி ஆகியோர்களுக்கு பதிவுத்தபால் மூலம் தனது நிறுவனததன் பழுதடைந்த மின்மீட்டரை மாற்றித்தருமாறு கோரிக்கை வைத்துள்ளார் என்றால் கோரிக்கை வைத்தள்ளார். ஆனால் நாங்கள் போலீசாரிடம் புகார் மனு அளித்து மீட்டரை ஒப்படைத்தபிறகு மேற்படி கோரிக்கை வைக்கப்பட்டது. எதிரி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் ரிட்மனு எண்.14390/2011 என்ற மனுவில் அவர் தனது நிறுவனத்தின் மின்இணைப்பு கோரினார் என்றாலும், அந்த மனு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டு எங்களால் அவரது நிறுவனத்திற்கு மின்இணைப்பு அளிக்கப்பட்டது என்றாலும் சரிதான். எதிரி எந்தகாலத்திலும் மின்திருட்டு செய்யவில்லை என்றாலும், செயயாத தவறுக்குள திரியின்மீ து பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும், எழுதப்படாத வெற்று காகிதம் மற்றும் காசோலையில் எதிரியிடமிருந்து வலுக்கட்டாயமாக கையெழுத்துபெறப்பட்டது என்றாலும் சரியல்ல. என்னுடைய சாட்சியங்களும், நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்களும் முன்னுக்கு பின் முரணாக உள்ளது என்றாலும், நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்**

தேதி 25.09.2025

சிசி.203/2024

**அ.சா.2 மீண்டும் ஆஜர். சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிரிதரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

எதிரியானவர் இவ்வழக்கு பதிவு செய்யப்படுவதற்கு முன்பே அவரது நிறுவனத்திலுள்ள மின்மீட்டர் சரியாக செயல்படவில்லை என்று 01.11.2011 அன்று கரிவலம்வந்தநல்லூர் சப் ஸ்டேசனில் எழுத்துபூர்வமான புகார் மனு அளித்தார் என்றால் அவ்வாறு அளித்திருக்க வாய்ப்பில்லை. அவ்வாறு அளித்திருந்தால் அது பற்றி எனக்கு தெரியாது. 01.11.2011 அன்று எதிரி கரிவலம்வந்தநல்லூர் சப்ஸ்டேசனுக்கு நேரடியாக சென்று மேற்படி புகார் அளித்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சப்ஸ்டேசனுக்கு கிடைக்கப்பெறும் நேரடியான புகார் மற்றும் பதிவுத்தபால் மூலமாக கிடைக்கப்பெறும் புகார் குறித்த பதிவுகள் பதிவேட்டில் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். மேற்படி பதிவேடு எங்களுடைய அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்படும் என்றால் மேற்படி பதிவேடு அதன் முக்கியத்துவத்திற்கு ஏற்றாற்போல் சிறிது காலத்திற்கு எங்கள் அலுவலகத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கும். எதிரியால் மின்மீட்டர் செயல்பாடு குறைபாடு பற்றி அளிக்கப்பட்ட புகார் முக்கியத்துவம் உடையதா என்றால் முக்கியத்துவம் உடையது. முக்கியத்துவம் பெற்ற வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை குறிப்பிட்ட காலத்திற்கு அழிப்பதற்கு வாய்ப்பில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தை நான் சோதனையிட சென்றபோது என்னுடன் கரிவலம்வந்தநல்லூர் உபமின்நிலையத்திலிருந்து எந்த அலுவலர்கள் வந்தனர் என்றால் கரிவலம்வந்தநல்லூர் உபமின்நிலைய பிரிவு அலுவலர், கள அலுவலர் ஆகியோர் என்னுடன் வந்தனர். மேற்படி பிரிவு அலுவலர் மற்றும் கள அலுவலர் ஆகியோர் எதிரியின் நிறுவனத்தில் மின்மீட்டர் குறைபாடு உள்ளது பற்றி அளிக்கப்பட்ட புகார் நிலுவையில் உள்ளது என்று என்னிடம் கூறினாரா என்றால் இல்லை. சம்பவ இடத்திலிருந்து பழுதடைந்த மின்மீட்டரை யார் எடுத்து எந்த இடத்திற்கு கொண்டுசென்றார் என்றால் மேற்படி மின்மீட்டரை சம்பவ இடத்தில் எதிரிக்கு உரிய அறிவிப்பு வழங்கியபிறகு உதவிசெயற்பொறியாளர் விநியோகம் கிராமப்புறம் சங்கரன்கோவில் அவர்கள் எடுத்து அவரது அலுவலகத்திற்கு கொண்டு சென்றார். தற்போது அந்த மின்மீட்டர் எங்குள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த மின்மீட்டர் தற்போது யார் வசம் உள்ளது என்றால் கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலைய பாதுகாப்பில் உள்ளது. மேற்படி மின்மீட்டர் கரிவலம்வந்தநல்லூர் காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது என்றால் 15.11.20211 அன்று உதவிசெயற்பொறியாளர் விநியோகம் கிராமப்புறம் சங்கரன்கோவில் அவர்களால் காவல்நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டது. சம்பவம் நடந்ததாக சொல்லப்பட்ட அன்றே நான் சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்தில் புகார் மனு அளிக்க முயற்சி செய்தேனா என்றால் சம்பவம் நடந்த அன்றே காவல்நிலையத்தில் புகார் மனு அளிக்க சென்றேன்.

அப்போது எதிரி 1–1/2 லட்சம் ரூபாய்க்கு காசோலை கொடுத்தார். அதனுடன் தன்னிடம் தற்போது பணம் இல்லை என்றும்,மீதிப்பணத்தை சிறிதுகாலம் கழித்து கட்டுவதாக தெரிவித்து எழுத்துபூர்வமான கடிதம் ஒன்று கொடுத்தார். எதிரிகாசோலை மற்றும் கடிதத்தை காவல்நிலையத்தில் வைத்து என்னிடம் கொடுத்தாரா என்றால் கொடுத்தார். (சாட்சி பின்பு தனக்கு அது பற்றி ஞாபகம் இல்லை என்று கூறினார்). மேற்படி கடிதம் மற்றும் காசோலை எதிரியால் கொடுக்கப்பட்ட விபரம் போலீசாருக்கு தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த அன்றே போலீசாருக்கு சம்பவம் பற்றிய விபரம் தெரியும் என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு சோதனைக்கு சென்றபோது எங்களுடன் போலீசார் வந்தனரா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் இருந்த சீல்கள் உடைந்திருந்ததால் (Tampered) மீண்டும் போலீசாரை அழைத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு நாங்கள் சென்றோம். 2 மாதங்களுக்கு ஒருமுறை மின்கணக்கீட்டாளர்(Assesor) மின்மீட்டர் கணக்கீடு செய்து எங்கள் அலுவலகத்திற்கு அது தொடர்பான விபரங்களை அனுப்பிவைப்பார் என்றால் சரிதான். மேற்படி மின்கணக்கீட்டாளர் எதிரியின் நிறுவனத்தில் சம்பவம் நடப்பதற்கு முன்பிருந்த ஒருவருட காலத்திற்குள் மேற்படி நிறுவனத்தில் மின்திருட்டு நடப்பதாகவோ, மின்மீட்டரில் குறைபாடு இருப்பதாகவோ புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. மேற்படி மின்கணக்கீட்டாளர் எதிரியின் நிறுவனத்தில் சம்பவம் நடப்பதற்கு முன்பிருந்த ஒருவருட காலத்திற்குள் மேற்படி நிறுவனத்தில் மின்மீட்டரின் சீல்கள் உடைக்கப்பட்டிருப்பது தொடர்பாக புகார் கொடுத்தாரா என்றால் இல்லை. 01.11.2011ம் தேதி எதிரி தனது நிறுவனத்தின் மின்மீட்டரில் குறைபாடு உள்ளதாக கரிவலம்வந்தநல்லூர் உபமின்நிலையத்தில் புகார் அளித்தார் என்றாலும், மேற்படி புகாரின் பேரில் அந்த உபமின்நிலையத்தின் களப்பணியாளரான சண்முகையா என்பவர் அதுகுறித்து சோதனை செய்வதற்கு எதிரியின் நிறுவனத்திற்கு சென்றார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அதுபற்றி எந்த ஆவணத்திலும் குறிப்பிடப்படவும் இல்லை. எதிரியின் நிறுவனத்திலுள்ள மின்மீட்டர் குறைபாடுகளை அறியும்பொருட்டு மேற்படி சண்முகையா மின்மீட்டர் சீல்களை உடைத்துபார்த்தார் என்றால் அவ்வாறு களப்பணியாளர் உடைப்பதற்கு அவருக்கு எந்த தகுதியும் கிடையாது. அவ்வாறு களப்பணியாளர் செய்திருக்க வாய்ப்பும் இல்லை. எதிரியின் நிறுவனத்திலிருந்த மின்மீட்டரின் சீல் களப்பணியாளர் சண்முகையாவால்தான் உடைக்கப்பட்டது என்றாலும், அவர் அவ்வாறு உடைத்தபிறகு மின்மிட்டரில் இருந்த குறைபாடுகளை பாாத்துவிட்டு திரும்பிவிட்டார் என்றாலும் சரியல்ல. எதிரி எந்தகாலத்திலும் மின்திருட்டு செய்ததில்லை என்றாலும், அவ்வாறு மின்திருட்டு செய்யாததால்தான் அரசுதரப்பு சாட்சியான சண்முகையா அரசுதரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு சம்பந்தப்பட்ட அனைதது ஆவணங்களும் காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டு காவல்நிலையத்தில் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வைத்து ஆவணங்கள் தயாரிக்கப்பட்டன. வழக்கு ஆவணங்கள் சம்பவ இடத்தில் வைத்து தயாரிக்கப்பட்டதாக

போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. பொதுவாக மோசடி காசோலைக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்படும் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எதிரிக்கு எதிராக காசோலை மோசடி வழக்கு தாக்கல் செய்ய நானோ, எனது அலுவலகத்தின அலுவலர்களோ முயற்சி செய்தோமா என்றால் முயற்சி செய்தோம். அதன் அடிப்படையில்தான் 15.11.2011 ம் தேதி எதிரிக்கு எதிராக மின்திருட்டு மற்றும் காசோலை மோடிச தொடர்பாக புகார்மனு கொடுத்தோம். எதிரியிடமிருந்து பெறப்பட்டதாக சொல்லப்படும் காசோலையின் அசலை காவல்நிலையத்தில் அளித்தேனா என்றால் அதுபற்றி சங்கரன்கோவில் கிராமப்புறம் விநியோகம் உதவி செயற்பொறியாளருக்குதான் தெரியும். எனக்கு தெரியாது. நான் கூறிய நாள் நேரத்தில் சம்பவ இடத்திற்கு சோதனைக்கு செல்லில்லை என்றாலும், எதிரி நிறுவனத்தின் மின்மீட்டர் கைப்பற்றப்படவில்லை என்றாலும், எதிரிக்கு எதிராக நான் கூறிய நாள் நேரத்தில் புகார் மனு அளிக்கப்படவில்லை என்றாலும், எதிரி எந்த மின்திருட்டிலும் ஈடுபடவில்லை என்றாலும் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் கரிவலம்வந்தநல்லூர் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றாலும், எதியிடம் எழுதாத வெள்ளைப்பேப்பரில் கையெழுத்து பெற்றோம் என்றாலும், எதிரியிடம் காசோலையிலும் கட்டாயப்படுத்தி கையெழுத்து வாங்கினோம் என்றாலும், எதிரிக்கு எதிராக மோசடியாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் சரியல்ல. சம்பவ இடத்தில் நாங்கள் சோதனைக்கு சென்ற சமயம் எதிரி ஒத்துழைப்பு அளித்தார் என்றால் சரிதான். அ.சா.1 ன் வேண்டுகோளுக்கிணங்க நான் இவ்வழக்கில் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**